# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8120322

1. District மாவட்டம் : சிவகங்கை PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பும் பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண 7/2024 Date: நாள் 9.09.2024

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 1988, as amended by the P.C Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 05.09.2024 Date to : நாள் வரை 06.09.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.09.2024 Time நேரம் : 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. III Time நேரம் : 07.35 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கொந்தகை, திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம். சுமார் 40 கி.மீ தென்மேற்கு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.க.வசந்த் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கண்ணதாசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி பசியாபுரம், கீழடி அஞ்சல், திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.முத்துமுருகன், வருவாய் ஆய்வாளர், கொந்தகை பிர்கா, திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 09.09.2024 தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி அஞ்சல், பசியாபுரம் என்ற முகவரியில் வசிக்கும் கண்ணதாசன் என்பவரின் மகன் திரு.வசந்த் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட திருப்புவனம் வட்டம், கொந்தகை பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முத்துமுருகன் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 09.09.2024-ம் தேதி 07.35 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 9/9/24
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.09.2024 at 08:00 hrs

Name: பெயர் (A.JOHN BRITTO)
Rank: நிலை Dy. Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai. No. எண்

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.7/2024 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

குற்ற எண்.7/2024 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் க.வசந்த், த/பெ.கண்ணதாசன், பசியாபுரம், கீழடி அஞ்சல், திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கொண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். எனது தந்தை கண்ணதாசன் கடந்த 12.08.2024ம் தேதி இறந்துவிட்டார். எனது அம்மா பெயர் மணிமாலா, உடன் பிறந்த அண்ணன் பெயர் கோபிநாத் ஆகும். எனது அம்மா வயதானவர், உடல்நலம் சரியில்லாமல் உள்ளார். எனது தந்தை இறந்துவிட்டதனால், கடந்த 24.08.2024ம் தேதி வாரிசு சான்றிதழ் வேண்டி, எனது அம்மா பெயரில் இ சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அப்போது எனது அலைபேசி நம்பரை விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். பின்னர் 30.08.2024ம் தேதி இதுசம்மந்தமாக VAO விசாரணை செய்தார். பின்னர் எனது மனுவின் நிலையினை இணையத்தில் பார்த்தபோது, கொந்தகை பிர்கா வருவாய் ஆய்வாளரிடம் மனு நிலுவையில் இருந்தது. எனவே, கடந்த 05.09.2024ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கொந்தகையில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த R.I. முத்துமுருகன் அவர்களை சந்தித்து வாரிசு சான்று தொடர்பாக கேட்டபோது, அவர் ரூ.2000/- தருமாறு கேட்டார். மறுநாள், 06.09.2024ம் தேதி காலை சுமார் 10.14 மணிக்கு R.I. முத்துமுருகன் அவரது அலைபேசி எண்.81222-12281-லிருந்து எனது அலைபேசி எண்.93626-22878-க்கு தொடர்புகொண்டு, "இன்றைக்கு ஆபிசுல வந்து என்னைய பாரு" என்று சொன்னார். அதன்படி, நான் அன்றைய தினம் மதியம் சுமார் 2.10 மணிக்கு கொந்தகை பிர்கா R.I. ஆபிசுக்கு சென்று, அவரை சந்தித்தபோது, "இன்னைக்கு ஆயிரம் ரூபாய் கொடு, Legal Heir Certificate-க்கு Recommend பண்ணி அனுப்புகிறேன். திங்கட்கிழமை இன்னொரு ஆயிரம் ரூபாய் கொடுத்துட்டு Certificate வாங்கிக்கிட்டுப்போ" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், அப்பா இப்பத்தான் இறந்தாங்க, அவர் முடியாமல் இருந்தப்ப மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இரண்டரை லட்சத்திற்கு மேல் செலவாகிவிட்டது, நகைகளை விற்றுதான் கடனை கட்டணும், ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறேன். கையில காசு இல்லை, ரெடி பண்ணிதான் கொடுக்கணும் என்று சொன்னதற்கு, அவர் என்னிடம், இன்றைக்கு

ரூ.1000/- கொடுத்தால் தான் recommend பண்ணுவேன் என்று சொன்னார். அதற்கு நான், பணத்தை ரெடி பண்ணி கொண்டு வருவதாக தெரிவித்துவிட்டு, வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது, மதியம் சுமார் 2.20 மணிக்கு R.I. முத்துமுருகன் அவரது அலைபேசியில் இருந்து எனது அலைபேசிக்கு Missed Call வந்தது. உடனே சுமார் 2.21 மணிக்கு அவரை அலைபேசியில் தொடர்புகொண்டபோது, அவர் என்னிடம், "மொத்தமாக பணம் ரூ.2000/-த்தை திங்கட்கிழமை கொண்டு வாங்க, சர்டிபிகேட் ரெடியாகிவிடும், பணத்தை கொடுத்துட்டு, சர்டிபிகேட்டை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுத்து வாரிசு சான்றிதழ் பெற விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் லஞ்சம் கேட்ட கொந்தகை பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.முத்துமுருகன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx, இணைப்பு 1) வாரிசு சான்று விண்ணபத்திற்கான ஒப்புகைச்சீட்டின் நகல், 2) எனது Application-க்கான online-ல் Check Status-ன் நகல்

Sir, Received the complaint on 09.09.2024 at 07.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.7/2024 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 09.09.2024 at 07.35 hrs and took up for investigation. sd.A.JOHN BRITTO, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR, அசல் புகார் மனு மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. [signature]
09/09/24

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.